வெளியீடு எண் 359

# திருப்பனந்தாள் தலவரலாறு

137

137
2-56
C

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 APR 1956
MADRAS

Q23:38.21193TP
N56

113556

தருமபுர ஆதீனம்.
1956



தருமபுர ஆதீனம் 25 ஆவது மகாசந்நிதானம்,
ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# திருப்பனந்தாள் தல வரலாறு

---

இஃது

இவ்வாலய பரம்பரைத் தருமகர்த்தா

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுர ஆதீனம்

25-ஆவது மகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள்**

திருவுள்ளப்பாங்கின்படி

திருப்பனந்தாள்

**ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில்**

வெளியிடப்பெற்றது.

18—1—56.

Q23:38.21193 TP
N56

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# பொருளடக்கம்


| | | பக்க எண் |
|---|---|---|
| தலமும் இருப்பிடமும் | ... | 5 |
| தலப்பெயர்கள் | ... | ,, |
| கோயிலமைப்பு | ... | 6 |
| மூர்த்திகள் | ... | 7 |
| தலப்பெருமை | ... | 8 |
| தீர்த்தங்கள் | ... | 9 |
| தலவிருட்சம் | ... | ,, |
| வழிபட்டோர்கள் | ... | ,, |
| நிர்வாகம் | ... | ,, |
| கல்வெட்டுக்கள் | ... | 10 |
| திருப்பதிகம் - உரையுடன் | ... | 15 |


11 3556

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

ஸ்ரீ காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருப்பனந்தாள் திருக்கோயிலின் அலுவலகத்தையும் நூலகத்தையும் திறந்துவைக்கும் நன்னாளின் (18—1—56) நினைவு வெளியீடு இது.

இதில், இச்சிவதலத்தின் வரலாற்றுச் சுருக்கமும், தேவாரத் திருப்பதிகமும், அதன் பொருட் சுருக்கமும், குறிப்புரையும் அடங்கியிருத்தலால், தல தரிசனம் புரியும் அன்பர்களுக்கு மிக்க பயனுயிருக்கும்.

இதனை வெளியிடத் திருவுள்ளங்கொண்டருளிய தருமை 25-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்களுக்குச் சைவர் உலகு பெரிதும் நன்றி பாராட்டும் கடமையுடையது.

வித்துவான், இராமலிங்கத் தம்பிரான்,
தேவஸ்தானக் கட்டளை விசாரணை.

ஞானசம்பந்தம் அச்சகம்,
தருமபுரம்.

உ

திருச்சிற்றம்பலம்

# திருப்பனந்தாள் தல வரலாறு

## 1 தலமும் இருப்பிடமும்

சிவனெனும் நாமம் தனக்கே உடைய செம்மேனியெம்மான், ஆன்மாக்கள் முத்தியின்பம் பெறும்பொருட்டு, கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கும் தலங்கள் பல. அவைகளுள் சோணுட்டில் காவிரியின் வடபால் விளங்கும் அறுபத்து மூன்று தலங்களுள் **திருப்பனந்தாள்** என்பதும் ஒன்று. கும்பகோணம் எனும் குடமூக்கிற்கு வடகிழக்கே 11-கல் தொலைவிலும், ஆடுதுறைக்கு வடக்கே 6-கல் தொலைவிலும் உள்ளது. தலத்தின் வடபால் 3-கல் தொலைவில் கொள்ளிட நதியின் முக்கியமான லோயர் (கீழ்) அணைக்கட்டு இருக்கிறது. ஆங்காங்கும் பஸ், வண்டி முதலிய வசதிகள் உள.

## 2 தலப்பெயர்கள்

தலவிருட்சம் பனை. ஆதலின் **திருப்பனந்தாள்** என்று பெயர் பெற்றது. பனசை என்றலும் உண்டு. வடமொழிப் பெயர் **தாலவனம்** (தாலம்-பனை). தாடகை அம்மையார் பூசித்தமையால் ஆலயம் **தாடகை யீச்சரம்** என்று வழங்கப் படுகின்றது. 'தண்பொழில்சூழ் பனந்தாள் திருத்தாடகை யீச்சரமே' என்பது திருஞானசம்பந்த சுவாமிகள் அருள்மொழி.

83
4-59



## 3 கோயிலமைப்பு

கோயில் ஊரின்நடுவே மிக அழகிய தோற்றத்துடன் விளங்குகிறது. உயர்ந்த மதில்களால் சூழப்பெற்றது. கீழ்ப் புறமும், மேற்புறமும் சிற்பங்கள் செறிந்த இராஜகோபுரங் களுடன் கூடிய வாயில்கள் விளங்குகின்றன. கோயிலின் உட்புறம் இரண்டு பிராகாரங்களும், மதிலின் புறத்தே மடவளாகமும், அழகிய நீண்ட வீதிகளும் இருக்கின்றன. இறைவன் சந்நிதானம் மேற்குமுகமாகவும், இறைவி சந்நிதானம் கிழக்குமுகமாகவும் விளங்குகின்றன. சுவாமிக்கும், அம்மையாருக்கும் தனித்தனி ஆலயங்கள் உள்ளன. மேலைக் கோபுரவாயிலின் உள்நுழைந்ததும் 16 கால் மண்டபம் இருக் கிறது. அதன் வடபுறம் வாகனமிருக்குமிடமும், அதன் கீழ்பால் நாககன்னிகை தீர்த்தமும் உள்ளன. தீர்த்தம் தென்புறம் திருமாளிகைப் பத்தியோடு கூடிய படிக்கட்டும், மற்ற மூன்று புறமும் சாதாரண படிக்கட்டும் அமைந்து விளங்கு கின்றன. அத்திருமாளிகைப் பத்தியில் மேற்புறம் நாககன்னிகை யம்மனும், கீழ்ப்புறம் இலிங்கப்பிரதிட்டையும் இருக்கின்றன. 16 கால் மண்டபத்தின் தென்பால் களஞ்சிய அறையும், தேவஸ்தான காரியாலயமும் நூல்நிலையமும் ஒன்றுக அமைந்த கட்டிடமும் விநாயகரும் துவஜஸ்தம்பமும், நந்தி மண்டபமும் விளங்குகின்றன. அப்பிராகாரத்தில் வடகீழ் மூலையில் யாகசாலை இருக்கிறது.

இரண்டாங் கோபுரத்திற்குள் சென்றதும் வௌவால் நெற்றி மண்டபம் விளங்குகின்றது. இப் பிராகாரத்தைத் திருமாளிகைப்பத்தி மண்டபங்கள் அழகு செய்கின்றன. இத் திருச்சுற்றில் கீழ்ப்பக்கத்தில் தலவிருக்ஷமும், அதன் பக்கத்தில் தாடகை பூஜைசெய்த ஐதிகத்தில் அமைந்த இலிங்க பிரதிட்